அ.வ.எண். 132/2024 நாள்: 24.07.2026

வா.சா.1 திருமதி.நட்சத்திரம்

<u>சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1) நான் எந்த முகவரியில் வசித்து வருகிறேன் என்றால் மன்னார்குடியில் வசித்து வருகிறேன். 1–ம் வாதி மற்றும் 2–ம் பிரதிவாதிக்கு இடையே எப்போது திருமணம் நடைபெற்றது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. நான் படித்துள்ளேன் என்றால் 9–ம் வகுப்பு வரை படித்துள்ளேன். எந்த வருடம் பள்ளி படிப்பை முடித்தேன் என்றால் ஞாபகம் இல்லை. தாவா சொத்தை தவிர வேறு சொத்துகள் எனது பெற்றோர் பெயரில் உள்ளதா என்றால் உள்ளது. மேற்படி சொத்துகளை யார் பராமரித்தார்கள் என்றால் எனது பெற்றோர் பராமரித்தார்கள், எனது பெற்றோர் இருவரும் இறந்து விட்டார்கள். எனது தந்தை எந்த வருடம் இறந்தார் என்றால் 2009 ல் இறந்தார். எனது தாயார் எந்த வருடம் இறந்தார் என்றால் 08.12.2020 ல் இறந்தார்.

2) எனக்கு திருமணம் நடந்தபோது எனது தந்தை உயிருடன் இருந்தாரா என்றால் இருந்தார். திருமணம் முடிந்த பிறகு நான் மன்னார்குடியில் இருந்தேனா அல்லது தஞ்சாவூரில் இருந்தேனா என்றால் மன்னார்குடியில்தான் இருந்தேன். எனது தகப்பனார் இறந்தபிறகு தாவா சொத்தையும் இதர சொத்துகளையும் எனது தாயார் சாகுபடி செய்தாரா என்றால் ஆமாம்.

பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.

S.d/ Natchathiram

Taken down by me in the open court read over to the witness and admitted by him to be correct.

Sd/-P.Ramesh

DISTRICT MUNSIF, THIRUVAIYARU